இந்தியா என்ற பெயரைத்தான் மாற்ற முடிந்திருக்கிறது – தேர்தலில்

# ‘இந்தியா’ என்ற சொல்லே பா.ஜ.க.வை விரட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, செப்.6–

வளர்ச்சிமிகு இந்தியாவாக மாற்றப் போகிறோம் என்ற பா.ஜ.க.வினரால் இந்தியாவின் பெயரைத்தான் மாற்ற முடிந்திருக்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின்அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:

பாசிச பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்தும் கூட்டணிக்கு INDIA என்று பெயர் சூட்டியதில் இருந்து பா.ஜ.க.வுக்கு இந்தியா என்ற சொல்லே கசந்துவருகிறது.

இந்தியாவை வளர்ச்சிமிகு இந்தியாவாக மாற்றப் போகிறோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா என்ற பெயரை மட்டும் தான் மாற்ற முடிந்திருக்கிறது.

அரண்டவர் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப் போல இந்தியா என்ற சொல்லே பா.ஜ.க.வை மிரட்டுகிறது. தேர்தலில் இந்தியா என்ற சொல்லே பா.ஜ.க.வை விரட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக சலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ஒரே நாடு; ஒரே தேர்தல் முறை

# ஒன்றிய பா.ஜ.க. அரசின் நோக்கம் கூட்டாட்சி முறைக்கு எதிரானது!

## ‘தி இந்து’ நாளேடு தலையங்கம்

சென்னை, செப். 6–

ஒன்றிய பா.ஜ.க. அரசு மேற்கொண்டுள்ள ஒரேநாடு ஒரே தேர்தல் நிலை, கூட்டாட்சி முறைக்கு எதிரானது என்று ‘தி இந்து’ நாளேடு (5.9.2023) தலையங்கம் எழுதியுள்ளது.

‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் வெளியான தலையங்கத்தின் தமிழாக்கம் வருமாறு:–

பல்வேறு மாநிலங்கள் கொண்ட ஒன்றிய நாடான இந்தியா போன்ற நாடுகளில் பல்வேறு அடுக்குகளின் ஆளுமைகள் செயல்படுகின்றன. ஒவ்வொரு குறிப்பிட்ட அடுக்குகளும் தங்களுக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள, யார் மிகவும் பொருத்தமானவர் என்பதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்க மக்களை அனுமதித்து அதன்படி அங்கு தேர்தல் ஜனநாயகம் செயல்படுகிறது.

ஒன்றியம், மாநிலங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே அதிகார வரம்பு நிர்ணயிக்கப்படுவதற்கும், நாடாளுமன்றம், சட்டமன்றங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றிற்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் காரணம் உள்ளது.

எல்லை வரைமுறையானது மேற்காணும் பல்வேறு அடுக்குகளின் பிரதி நிதிக்கு குறிப்பிட்ட பங்களிப்பை அனுமதிக்கிறது. அத்துடன், கட்சி சார்பு, வேட்பாளர் பலம், கருத்தியல் நிலைகள் அல்லது ஒவ்வொரு தொகுதிக்குமான எளிய சமூகப் பொருளாதார காரணிகளின் அடிப்படையில் பல்வேறு வாக்காளர் தேர்வுகளை பரிந்துரை செய்கிறது.

ஆந்திரப் பிரதேசம், சிக்கிம் போன்ற ஒரு சில மாநிலங்களில் சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்துக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது என்பது தற்செயல் நிகழ்வாகும். ஏனெனில் தேர்தல் நடைமுறையானது அவ்வாறு இணைந்திருந்தது.

பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசு முன்னாள் குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் குழு ஒன்றை அமைத்து, அனைத்து நிலைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய முற்பட்டுள்ளது.

இது பல அடுக்கு நிர்வாக அமைப்பிற்கு முரணானது. கூட்டாட்சி முறைக்கு எதிரானது.

அந்தக் குழுவின் விதிமுறைகளில் ஒன்று மிகவும் ஆபத்தானது. அதாவது, ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் நோக்கத்திற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை மாநில அரசுகள் அங்கீகரிப்பது தொடர்பாக பரிந்துரைக்க வேண்டும் என்பதே அந்த விதி.

இந்த விதிப்படி செயல்பட்டால் அது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது மட்டுமல்ல; சட்ட ஆய்வில் அது எடுபடாமல் போய்விடும். பல சட்ட மன்றங்களுக்கு முன்னதாகவே தேர்தல் நடத்தப்பட வேண்டியதாகிவிடும். இது ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.



THE HINDU

**Tiers apart**

'One nation, one election' militates against federalism, tiered governance

In a multi-tiered governance system such as the one in India, a Union of States, electoral democracy works by allowing people to choose their representatives for each tier based on their perception of who is best suited to represent them for each specific tier. There is a reason why there is a demarcation of power between the Union, States and local body institutions and why there is a voter mandate every five years to elect representatives for Parliament, Assemblies and local bodies. The demarcation allows for specific roles for each representative across these tiers and suggests varied voter choices that could be based on party affiliation, candidate strength, ideological positions or simple socio-economic reasons specific to each constituency. That some States such as Andhra Pradesh and Sikkim hold

முதலாவதாக, நாடாளுமன்றம், சட்டமன்றம், நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்துக்களுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டால், செலவீனம் குறையும் என்ற நோக்கில் இது இருக்கும் என்று கூறப்படுகிறது. அவ்வப்போது சட்ட மன்றங்களுக்கு தேர்தல் நடத்தப்படுவதால் அரசு தேர்தல் கண்ணோட்டத்துடனே இருக்கும் என்பதும் ஒரு தவறான எண்ணம்.

ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்படுவதால், செலவு மிச்சமாகும் என்பதற்கான ஆய்வுகள் எதுவும் இல்லை. அத்துடன் தேர்தல் நடத்தப்படுவதால் ஏற்படும் செலவு அடிப்படையில் வீணானது என்று கூற முடியாது. பிரச்சாரத்திற்கான செலவு பொருளாதார நடவடிக்கைகளில் பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பல்வேறு நிலைகளில் தேர்தல் நடத்துவதன் மூலம் வாக்காளர்கள் அவ்வப்போது தங்கள் விருப்பத்திற்கேற்ற பிரதிநிதிகளை தேர்வு செய்ய ஏதுவாக உள்ளது. அவர்களிடம் குறிப்பிட்ட குறைகளை வாக்காளர்கள் கேட்கவும் அது உதவிகரமாக இருக்கும்.

இரண்டாவதாக, பல்வேறு கால கட்டங்களில் வேறுவேறு தேர்தல்களை நடத்துவது என்பது இந்த அடுக்குகளுக்கான பிரதிநிதிகளை தேர்வு செய்ய வேண்டும் என்பதற்காகவே தவிர, பா.ஜ.க. அதைச் செய்ய முற்படுவது போல், ஒவ்வொரு கட்டத்திலும், ஒரு அடுக்கு அல்லது தனித் தலைவரை பற்றிய வாக்கெடுப்போ அல்ல.

இந்தியக் கூட்டாட்சி அமைப்பில் அக்கறை கொண்ட சிவில் மற்றும் அரசியல் அமைப்பில் உள்ளவர்கள், மக்களவைத் தேர்தலும் சட்டமன்றத் தேர்தலும் தனித்தனியாக நடத்தப்படவேண்டும் என்று உரத்தக் குரல் எழுப்ப வேண்டும். ஏனெனில் பிரச்சார நிலைகளும் ஜனநாயக நிலைகளும் வேறு வேறாகும்.

மக்களவைக்கும் மாநில சட்டமன்றங்களுக்கும் அதன் கால வரையறை நிர்ணயிக்கப்பட்டு விட்ட நிலையில் முன்னதாகவே எந்தவொரு காரணத்திற் காகவும் கலைக்கப்படுவதற்கு தடை விதிக்கப்பட்டாலன்றி அந்த யோசனை செயல்பட முடியாததாகும்.

இவ்வாறு ‘தி இந்து’ நாளேடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஆதிதிராவிடர் நலக்குழு – சிறுபான்மை நல உரிமைத்துறை ஏற்பாடு

# மதுரையில் 9ம்தேதி கலைஞர் நூற்றாண்டு விழா. கருத்தரங்கம்!

## அந்தியூர் செல்வராஜ் – அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான் –கே ஆர். பெரிய கருப்பன்– பி .மூர்த்தி– பழனிவேல் தியாகராஜன் –திருமதி கயல்விழி செல்வராஜ் –மதிவேந்தன் பங்கேற்பு!

*சிவகங்கை. செப். 6–*

*மாநில ஆதிதிராவிடர் நலக்குழு மற்றும் சிறுபான்மை நல உரிமைத் துறை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு மதுரையில் ரிங் ரோடு பாண்டி கோயில் அருகில் உள்ள துவாரகா பேலஸில் வருகிற9ம்தேதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் சிறப்பு கூட்டம் மற்றும் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. ஆ.கிருஷ்ண சாமி எம்.எல்.ஏ.. தலைமையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மருதூர் ராமலிங்கம், சே. புஷ்பராஜ், தீப்பம்பட்டி ஆறுச்சாமி, முன்னாள் எம்.எல்.ஏ. பி.துரைச்சாமி, மாநில துணைச் செயலாளர் கள் பொன்தோஸ், சி.தசரதன், மு. பரமானந்தம், அரூர் ராஜேந்திரன், ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. முன்னாள் எம்.எல்.ஏக்கள் வி பி .ராஜன், எஸ். மாரியப்பன் கென்னடி, ஆகியோர் வரவேற்றுப் பேசுகிறார்கள். இந்த கருத்தரங்கில் மாநில துணை பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி, அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், கே ஆர். பெரிய கருப்பன், பி.மூர்த்தி,பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன், கயல்விழி செல்வராஜ், மரு. மதிவேந்தன், எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசிரவிக் குமார், கோ. தளபதி மற்றும் முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம், மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மணிமாறன், மேயர் திருமதி இந்திராணி பொன்வசந்த், மற்றும் சு.வெங்கடேசன், கே. எஸ் .எம். மணிமுத்து, முன்னாள் எம்.எல்.ஏக்கள் வி.வேலுச்சாமி, சவுந்திர பாண்டியன்,எம்.முத்துராமலிங்கம், முன்னாள் மேயர் பெ.குழந்தை வேலு, எஸ்.ராகவன்,ஏ.சிவனாண்டி, சிறுபான்மை யினர் அணி நிர்வாகிகள் ர.சுபேதார் கான், கே.ஏ.உஸ்மான் அலி, முகைதீன் பிச்சை, எஸ். மீராஜான், என். எம்.சாக்ளா, ஆகியோர். வாழ்த்துரை வழங்குகி றார்கள் . கருத்தரங்கில் காலத்தை வென்றவர் கலைஞர் என்ற தலைப்பில் தமிழ்நாடு சிறுபான்மை யினர் ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், முன்னாள் அமைச்சர் இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன், நாஞ்சில்சம்பத் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள். இதற்கான நிகழ்ச்சி ஏற்பாடுகளை முன்னாள் எம்.எல்.ஏக்கள் வி.பி .ராஜன் எஸ் மாரியப்பன் கென்னடி மற்றும் விழாக்குழுவினர் செய்து வருகிறார்கள்.*

அன்னவாசல் நகரக் கழகச் செயலாளர்

# எம்.எஸ்.அக்பர் அலி மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 6 –

அன்னவாசல் நகரக் கழகச் செயலாளர் எம்.எஸ். அக்பர் அலி அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

‘இஸ்ரோ’ விண்ணில் ராக்கெட்டுகளை ஏவும்போது வர்ணனை செய்த

# திருமதி வளர்மதி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, செப். 6–

இஸ்ரோ விண்ணில் ராக்கெட்களை ஏவும்போது அவை குறித்த தகவல்களை வர்ணனை செய்து வந்த திருமதி. வளர்மதி அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

இஸ்ரோ விண்ணில் ராக்கெட்டுகளை ஏவும்போது அவை குறித்த தகவல்களை வர்ணனை செய்து வந்த ‘Mission Range Speaker’ திருமதி. வளர்மதி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன்.

மிகவும் சவாலான ஒரு பணியைத் திறம்படக் கையாண்டு, இஸ்ரோவின் முக்கியத் திட்டப்பணிகளுடைய வெற்றித் தருணங்களின் குரலாக ஒலித்த திருமதி. வளர்மதி அவர்களது மறைவால் வாடும் குடும்பத்தினருக்கும், அவரது பணியிடத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; தினமலர் நாளேட்டில் அண்மைக் காலமாக, அடிக்கடி “உங்களில் ஒருவன்” என்ற தலைப்பில், மாநில பா.ஜ.க. தலைவர் எழுதி வருவதைப் பார்த்தீர்களா ?

**சிந்துமணி :** ஆமாண்டி அந்து; **பார்த்தேன், நமது கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நீண்ட காலமாகவே, 1.1.2006 அன்று தொடங்கி, கடந்த பதினேழு ஆண்டுகளுக்கும் மேலாக, “உங்களில் ஒருவன்” என்ற தலைப்பில்,**

**“முரசொலி” நாளேட்டில், அவ்வப்போது,அவசியம் ஏற்படும் சந்தர்ப்பங்களில், கழகத் தோழர்களுக்குக் கடிதம் எழுதி, முதல் பக்கத்திலே வெளியிடப்பட்டு வருகிறது.**

**“உங்களில் ஒருவன்” என்ற தலைப்பை அப்படியே ‘காப்பி’ அடித்து, வெளியிடுகிறது தினமலர் நாளேடு.**

**“தம்பிக்கு” என்ற கடிதம் அறிஞர் அண்ணா எழுதியது; “உடன் பிறப்பே” என்ற கடிதம் கலைஞர் எழுதியது; அதைப் போல “உங்களில் ஒருவன்” என்றால் மு.க.ஸ்டாலின், எழுதி வருவது.**

**இதை அறிந்திருந்தும், வேண்டுமென்றே, திசை திருப்புவதற்காக, “உங்களில் ஒருவன்” என்ற தலைப்பைப் பயன்படுத்தும் ‘பண்பாட்டை(!)’ என்னவென்று சொல்வது?**

ஒரே நாடு ஒரே தேர்தல்!

# நடைமுறைக்கு சாத்தியமில்லாததை புகுத்த பா.ஜ.க. முயற்சி!

## நாடாளுமன்ற கழகக் குழுத்தலைவர் டி.ஆர்.பாலு பேட்டி!



புதுடெல்லி, செப். 6 –

ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைக்கு சாத்தியமில்லாதது என நாடாளுமன்ற கழகக் குழு தலைவர் டி.ஆர். பாலு தெரிவித்துள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் என்பது நடைமுறைக்கு சாத்தியமில்லாதது என்றும், இதில் ஏராளமான நடைமுறை சிக்கல்கள் உள்ளதாக குறிப்பிட்டார்.

நடைமுறைக்கு சாத்தியமில்லாத திட்டங்களையே பா.ஜ.க. புகுத்த முயற்சிக்கிறது என்றும், பா.ஜ.க.வின் ஆட்சி முறையே விந்தையாக உள்ளதாக கூறினார். மேலும் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்ட முயற்சி குறித்து இன்று நடைபெறும் இந்தியா கூட்டணி கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதாகவும் டி.ஆர். பாலு கூறினார். இந்தியா என்ற பெயரில் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளதால் பாரதம் என்ற பெயரை பயன்படுத்த பா.ஜ.க. முயற்சிப்பதாகவும் டி.ஆர்.பாலு விமர்சித்தார்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சோழவந்தான் தொகுதி அலங்காநல்லூர் அருகில் உள்ள பெரிய ஊர்சேரியில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு மதுரை வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் தன்ராஜ்,ரகுபதி,ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜன், முத்தையா,சங்கீதா மணிமாறன், சாமிநாதன், கார்த்திக்,ஆதிசங்கர்,பிரதாப்,சதீஷ், ராகுல், சந்தானம், சுந்தர், தனிக்கொடி மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.